# தமிழ் கல்விநிலையம் – மவுண்றூயிட்

## Tamil Study Centre - Mount Druitt


**Mobile: 0449 892 066**

**Email :mtdruitttsc@gmail.com** **Web : www.mtsc.org.au**


செய்தி மடல் 2018 — 04 08-12-2018

***உலகத்தில் ஏழு அதிசயங்கள் உள்ளது என்று சொல்கிறார்கள். எமக்கு ஒரே அதிசயம் எமது தாய்மொழியாம் "தமிழ்" தான்.*** அத்தமிழை கற்றிட வந்திருக்கும் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் அன்பான வணக்கங்கள். இச்செய்திமடல் மூலம் பின்வரும் விடயங்களை உங்கள் கவனத்திற்குச் சமர்ப்பிக்கின்றோம்.

1. *வருடாந்த பரிசளிப்பு விழா 2018*

எமது பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா மற்றும் நத்தார் கொண்டாட்டமும் இராப்போசன விருந்தும் எதிர்வரும் டிசம்பர் மாதம் 22ம் திகதி (22.12.2018) சனிக்கிழமை அன்று மாலை. 6.00 மணிக்கு **Erskine Park Community Hall (57 Peppertree Drive, Erskine Park NSW 2759)** நடைபெறும்.

அனைவரும் இவ்விழாவிற்கு உங்கள் உற்றார் உறவினர்கள் நண்பர்களுடன் குடும்ப சமேதராக வருகை தந்து சிறப்பிற்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்

வழமைபோல இராப்போசனத்திற்கான உணவுப் பண்டங்கள் எமது பெற்றோர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும். உணவுப் பண்டங்களை வழங்க முடியாத பெற்றோர்கள் பரிசளிப்பு விழாக் கட்டணமாக $30ஐ செலுத்தி விழா சிறப்பாக நடைபெற ஒத்துழைக்குமாறு தங்களை பணிவுடன் கேட்டுக் கொள்கின்றோம். இது தொடர்பான விபரங்களுக்கு எமது உப செயளாளர் திரு சசிசுதன் அவர்களை தொடர்பு கொள்ளவும்.




**Erskine Park Community Hall**

**57 Peppertree Drive, Erskine Park NSW**

2. *பாடசாலைக் கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள்*

இதுவரை உங்கள் பிள்ளைகளுக்கான இந்த வருடத்திற்கான பாடசாலை கட்டணம் மற்றும் இதர கட்டணங்களான அதிஷ்ட இலாப சீட்டிழுப்பு, கலைவிழா கட்டணங்கள் செலுத்த தவறியவர்கள் விரைவாக அதனை செலுத்தி எமக்கு உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம். மேலதிக விபரங்களுக்கு எமது கல்விநிலைய பொருளாளர் திரு.பே.மகேஸ்வரமூர்த்தி அவர்களை தொடர்பு கொள்ளவும்.

### *3. 2019ம் ஆண்டிற்குரிய பாடசாலை நிர்வாகக் குழு*

எமது பாடசாலையின் 2019ம் ஆண்டின் நிர்வாகக் குழு அங்கத்தவர்களாக பங்குபற்ற விருப்பமுடையவர்கள் எமது செயலாளர் திரு.சரவணகுமார் ராஜாராம் அவர்களை தொடர்பு கொள்ளவும்.

இதுவரை காலமும் பாடசாலை நிர்வாகத்தில் பங்குகொள்ளாத பெற்றோர்கள் ஆசிரியர்கள் 2019ம் ஆண்டின் பாடசாலை நிர்வாகத்தில் இணைந்து மவுண்ட்றூயிட் தமிழ் பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவும்படி தங்களை தாழ்மையுடன் வேண்டிக்கொள்கின்றோம்.

### 4. *இணையத் தளம் (Webpage)*

எமது பாடசாலை இணையத் தளமான ***www.mtsc.org.au*** புதுபொழிவுடன் தேவையான தகவல்ளைக் கொண்டதாக தரவேற்றப்பட்டுள்ளது என்பதையும் உங்களுக்கு அறியத்தருகின்றோம்.

### 5. *முகப்புத்தகம்* facebook

மவுண்ட்றூயிட் தமிழ் பாடசாலைக்கான முகப் புத்தகபக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதையும் உங்களுக்கு அறியத்தருகின்றோம்.

### *6. பாடசாலை விடுமுறை*

எமது பாடசாலை தவணை நான்கின் கடைசி நாளான 22.12.2018 அன்று பரிசளிப்பு விழாவுடன் மூடப்பட்டு எதிர்வரும் 02.02.2019 சனிக்கிழமை அன்று மீண்டும் புதிய வருடத்திற்கான முதலாம் தவணைக்காக திறக்கப்படும் என்பதனையும் உங்களுக்கு அன்புடன் அறியத்தருகின்றோம்.

நன்றி

மவுண்ட் றூயிட் தமிழ் பாடசாலை நிர்வாகம்



**பெரும் சாதனை செய்வதற்கு**

**மூன்று நிலைகளைக் கடந்தாக**

**வேண்டும். அவை —**

**ஏளனம், எதிர்ப்பு, அங்கீகாரம் ஆகியவை.**

*சுவாமி விவேகானந்தர்.*

